IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:34/2013

**DEP OF WITNESS:** DW.1 NAME: Archana Date:23-11-2021

குறுக்கு விசாரணை

நான் கமலாபுரத்தில் வசிக்கிறேன். எனக்கு திருமணம் **2014** ல் நடைப்பெற்றது. எனது மாமியார் வீடு கலவையில் உள்ளது. நான் கமலாபுரத்தில் இருப்பதாக பொய் சொல்கிறனே் என்றும் கலவையில் தான் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பி.டெக் படித்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகளை தெரிந்து தான் நான் கையெழுத்து போட்டுள்ளேன். எனது பிறந்த தேதி **29.09.1986** ஆகும். எனக்கு வழக்கின் விவரம் எனது அப்பா சொல்லி நன்கு தெரியும். தாவா சொத்தில் நாங்கள் தான் சுவாதீனத்தில் உள்ளோம். எனது அப்பா பெயரில் உள்ள பொது அதிகார பத்திரம் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளோம் வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பாவிற்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் தான் வழக்கு நடத்துகிறார். பொது அதிகார முகவருக்கு என்று பொதுவாக ஒரு சில நடைமுறைகள் உண்டு அது பற்றிய விவரம் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வாதி தரணியம்மாள் ரங்கநாத முதலியார் என்பரிடமிருந்து கிரையம் வாங்கிய விவரம் தெரியும். தரணியம்மாள் கிரையம் வாங்கிய விவரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு தெரியாது என்பதால் பிரமாண வாக்கு மூலத்தில் அதை மறுத்து கூற இயலாது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணயத்தை பற்றி நேரடியாக தெரியாது எனது அம்மா கூறி தெரியும்.

எனது அப்பா சொத்தின் உரிமையாளர் இல்லை. பொது அதிகார முகவர் மட்டுமே ஆவார். எனது அப்பாவிற்கு சொல்லி உரிமை இல்லை என்பதால் எனக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் சுவாதீனத்தில் உள்ளதாக சாட்சி கூறுகிறார். நீங்கள் மட்டும் அல்லாது மற்ற எந்த பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா பி.சா.ஆ. 4 ஆவணம் தான் எனது அப்பாவிற்கு தாராபாயால் எழுதி கொடுக்கப்பட்ட பொது அதிகாரம் ஆகும். 26.05.2017 இல் இறந்தார். தாராபாய் அம்மாள் தற்போதும் உயிரோடு உள்ளார். அந்த அம்மாள் அந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக உள்ளார். அவர் எக்ஸ்பார்டி ஆகிவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 1ம் பிரதிவாதியும் எக்ஸ்பார்ட்டி ஆகிவிட்டார் என்ற விவரம் தெரியும். 26.05.2017 ம் தேதி அன்று எனது அப்பா இறந்து விட்ட அன்றே பி.சா.ஆ.4 ஆவணம் முடிவுக்கு வந்து விட்டது என்று சொன்னால் சரிதான். ஆகையினால் சட்டப்படி செல்லாத பி.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் எவ்வித உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை நடத்துவதற்கு எவ்வித சட்டத் தகுதியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN
DISTRICT MUNSIF